**PRESS NOTE**

**PROPERTY TAX ASSESSOR WAS ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.6,000/- FOR NAME TRANSFER OF PROPERTY TAX**

The complainant B.Srinivasan, is residing at No.77M/11, Block No.77, Vadivudaiyamman Nagar, Manali New Town, Sadaiyankuppam, Thiruvallur. The complainant purchased a property at Thiruvotriyoor Circle, Chennai and also his brother purchased a property at the same place. The complainant applied name transfer of property tax for the properties at Assistance Revenue Office, Zone II, Greater Chennai Corporation, Manili. Tr.Baskar, Tax Assessor, Assistance Revenue Office, Zone II, Greater Chennai Corporation, Manili, had demanded Rs.8,000/- as bribe for procession his applications. On the request of the complainant Tr.Baskar, Tax Assessor, reduced the bribe amount from Rs.8,000/- to Rs.6,000/- Not willing to give the bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Chennai City IV Detachment, and preferred a complaint. In this connection a case was registered and a trap was organized yesterday 09.01.2024. During the trap Tr.Baskar, Tax Assessor, reiterated his demand and received the bribe amount of Rs.6,000/- from the complainant. The accused was arrested.

# பத்திரிக்கைச் செய்தி

## சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய ரூ.6,000/- லஞ்சம் கேட்டு பெற்ற சொத்துவரி மதிப்பீட்டாளர் கைது

புகார்தாரர் திரு.சீனிவாசன், 77எம்/11, 77வது பிளாக், வடிவுடையம்மன் நகர், மணலி புது நகர், சடையன்குப்பம், திருவள்ளுவர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய பெயரில் ஒரு வீட்டு மனையும் மற்றும் அவருடைய அண்ணன் அவருடைய பெயரில் ஒரு வீடுடன் கூடிய மனையையும் வாங்கியுள்ளனர். இந்த இடங்களுக்கு சொத்துவரியில் பெயர் மாற்றம் செய்ய உதவி வருவாய் அலுவலகம், மண்டலம் 2, மணலி, சென்னை மாநகராட்சியில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து சொத்துவரியில் பெயர் மாற்றம் செய்ய திரு.பாஸ்கர், சொத்து வரி மதிப்பீட்டாளர் தனக்கு லஞ்சமாக ரூ.8,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின்னர் புகார்தாரரின் வேண்டுகோளை ஏற்று லஞ்ச பணம் 8,000/-லிருந்து ரூ.2,000/- குறைத்து தனக்கு ரூ.6,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு 4ல் புகார் மனு அளித்தார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு நேற்று 09.01.2024ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பாஸ்கர், சொத்துவரி மதிப்பீட்டாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.6,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.